பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 10 சனிக்கிழமை 23.03.2024 கதிர் 137

## இன்னும் 10 வருடங்களில்
# பெரும் பொருளாதாரமாக வடக்கை மாற்ற அனைவருக்கும் ஜனாதிபதி அழைப்பு
### ஒட்டகப்புலத்தில் நேற்று அவர் உரை



எதிர்வரும் 05, 10 வருடங்களில் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வடக்கிற்கு வலுவான பொருளாதாரத்தை வழங்குவதற்குநாம்செயற்பட்டு வருகின்றோம். இலங்கையின் வடக்கை ஒரு பெரிய ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் ஒரு குள்ளநரி என்று வர்ணிக்கப்படுவதை யாழ்ப்பாணத்தில் நேற்று மீண்டும் ஒரு தடவை நிரூபித்தார். அவரது கட்சியின் பிரதித் தலைவரான முதல் நாள் மலையில் யாழ். மாவட்ட அமைப்பாளராக நியமனம் கொடுத்த அருண் சித்தார்த்தினால் கட்சிக்குள் எழுந்த அதிருப்தியை, அச்சத்தை புறங்கையால் துடைத்துவிட்டுப் போய்விட்டார்.

அருண் சித்தார்த் தமிழர்கள் மத்தியில் ஒரு தமிழர் விரோதப் பேர்வழி என்று அறியப்பட்டவர். தன் புகழ் மற்றும் நலன்களுக்காக அவர் தமிழர்களின் அனைத்துத் தரப்பினரையும் தூக்கி எறிந்து எள்ளி நகையாடியவர். தனது சிங்கள பௌத்த எஜமானர்களுக்கான ☞2

## நெல் கொள்வனவுக்கு நிதியை ஒதுக்குங்கள்
### நாடாளுமன்றில் ரஞ்சித் எம்.பி. வலியுறுத்து

நெல்லை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற நெல் அறுவடையை விற்பனை செய்தல் உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் பற்றிய சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞2

## அதானியின் காற்றாலைகளினால் வலசை பறவைகளுக்கு பேரழிவு
### பேராசிரியர் செனிவிரட்ண தெரிவிப்பு

அதானி குழுமத்தின் காற்றாலை மின்திட்டம் காரணமாக மன்னாரிற்கூடாக இலங்கைக்கு வலசை வரும் பறவைகளிற்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம்எனகொழும்பு பல்கலைகழகபேராசிரியர் சம்பத் எஸ் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

வலசை பறவைகளிற்கான முக்கியமான நுழைவாயிலாகமன்னார் காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர் அதானியின் காற்றாலை மின்திட்டத்தினால் பறவைகளிற்கு பேரழிவு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காற்றாலை மின்திட்டத்திற்காகஉருவாக்கப்படும் ஒவ்வொருகோபுரமும்120 மீற்றர்உயரம்கொண்டதாக காணப்படும். மேலும் 96 மீற்றர் நீளமான சுழலும் கத்திகள் காணப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

காற்றாலைகள் மூலம் உமிழ்வுகள் வெளியாவதில்லை அவை அதிக சத்தத்தை எழுப்புவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ள அவர் எனினும் இந்த காற்றாலைகள் சுற்றுச்சூழலிற்குஉகந்தவையா பொருளாதாரத்திற்கு பயன்படுமாஎன்பது ☞9

## அறுவடை முடிந்த 2 மாதங்களின் பின்பே நெல்லுக்கு விலையா?
### விஜித ஹேரத் எம்.பி. சாடல்

அறுவடை முடிந்து 2 மாதங்களின் பின்னர் நெல்லுக்குவிலைநிர்ணயம் செய்யப்படுகிறது என்று சாடினார் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

நெல் அறுவடைக் காலத்தில் விவசாயிகளுக்கு முறையான விலைநிர்ணயம்செய்து அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்குரியது. ஆனால் நாட்டில் அதிகமான மாவட்டங்களில் நெல் அறுவடை இடம்பெற்று 2 மாதங்கள் கடந்துள்ள நிலை ☞9

## பெண்களின் பாலியல் செயற்பாட்டு வயதைக் குறைக்கக் கடும் எதிர்ப்பு

1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக்கோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்குஅமைய,16வயதுக்குட்பட்ட பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில்உடலுறவுகொண்டாலும்,அதுகற்பழிப்பாகக் கருதப்படும். எனினும், நீதி அமைச்சரால் தண்டனைச் சட்டக்கோவைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தம்மூலம்அந்தவயதெல்லை 14 வயதாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்ததிருத்தத்தைஉடன் நிறுத்துமாறு நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும்அரசியலமைப்பு மறுசீரமைப்பு ☞9

## விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்கும் திட்டம்
### மார்ச் 1 முதல் நடைமுறையில்

வீதி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளின்றி உடனடியாக இழப்பீடு வழங்கும் வேலைத் திட்டமும் மார்ச் 1 முதல் ஆரம்பிக்கப்பட்டுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அதற்கமைய, விபத்து இடம்பெற்று ஒருவருடத்திற்குள்சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் 5 இலட்சம்ரூபாவரையான இழப்பீட்டுத்தொகையை பெற்றுக்கொள்ள முடிவதோடு,அந்ததொகையை காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு ☞8

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கி. அரிசி
### நாடாளுமன்றில் இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

ஏழ்மை மற்றும் குறைந்த வருமானம் பெறும் 27 லட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோ கிராம்அரிசிவழங்கதீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட மட்டத்தில் 85 மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய 11 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நெல் அறுவடையை விற்பனைசெய்தல்உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் பற்றிய சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயத்துறையில் கொள்கை ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதால் தோற்றம் பெற்ற நெருக்கடியை அனை ☞2

### பொருளாதாரத்தை மீட்டெடுக்கும்
## ரணிலின் வேலைத் திட்டத்துக்கு ஜப்பானிய அரசின் முழு ஆதரவு
### அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதாக ஜப்பானியதூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி தெரிவித்தார்.

நிலமானியமுறைமை சமூகத்திலிருந்து புதிய ஆட்சி முறையை நோக்கிய ஜப்பானின் பயணத்திற்கும் இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளை சுட்டிக்காட்டியதூதுவர், ஜப்பான் மீள் எழுச்சி காலத்தில் வெளிப்படுத்திய ஈடுகொடுக்கும் இயலுமையை இலங்கை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

'ஜப்பானிடம்இருந்து இலங்கைகற்கவேண்டிய பொருளாதாரஅபிவிருத்தி மற்றும்நவீனமயமாக்கல் பாடங்கள்' என்ற தலைப்பில் சர்வதேச ஆராய்ச்சி அமைப்பினால்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு கிரான்பெல் ஹோட்டலில்நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி இதனைக் குறிப்பிட்டார்.

'ஜப்பானின் நவீனமயமாக்கல் மூலம் இலங்கையின்பொருளாதார மீட்சி மற்றும் நிர்வாகத்திற்கு கற்க வேண்டிய பாடங்கள்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய தூதுவர், ஜப்பானின் வரலாற்றில் கடந்து வந்த சவால்களுக்கு ஈடுகொடுத்து, நவீன மாற்றங்களுக்கு ஏற்றவாறு விரைவான வளர்ச்சியை நோக்கி நகர்ந்தஅனுபவங்களை இதன்போது விவரித்தார்.

புவிசார் அரசியல் வரைபடவியலாளர்(Geopolitic Cartog- ☞2

## அமைச்சரின் வாக்குறுதியை அடுத்து போராட்டம் நிறைவு





இந்தியமீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்திருந்த உணவுதவிர்ப்புபோராட்டம்முடிவுக்குவந்துள்ளது.

யாழ்மாவட்டகிராமிய கடற்தொழில் அமைப்புக்களின்சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற்தொழில்கூட்டுறவுசங்கங்களின் சம்மேளனமும் இணைந்து மார்ச் 19 காலை முதல் நேற்று வரை யாழ்ப்பாணத்தில் உள்ளஇந்தியத்துணைத் தூதரகத்திற்கு அருகே, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு ☞9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

விசுவாசத்தைக் காட்டுவதற்கு அவர் தேர்ந்தெடுத்த வழிமுறை பெரும்பான்மைத் தமிழர்களைப் பகைத்துக்கொள்வது, அவர்களின் நம்பிக்கைகள் விருப்புக்களைச் சிதைத்தழிப்பது என்பவையே. அவருடைய ஒரே குறிக்கோளாக இருந்தது பௌத்த சிங்களத் தலைமைகளின் நம்பிக்கையை வென்றெடுத்து அதன் மூலம் பலாபலன்களை அனுபவிப்பது மட்டும்தான். அந்த இலக்கில் அவர் வெற்றியும் பெற்றார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நுழைந்து அதன் பிரதித் தலைவர்களில் ஒருவர் மூலம் மாவட்ட அமைப்பாளர் என்கிற தகுதியையும் பெற்றுக்கொள்ள அவர் காட்டிவந்த பௌத்த சிங்கள விசுவாசம் பெரிதும் துணை நின்றுள்ளது. அப்படிப்பட்ட அருண் சித்தார்த்தால் அடுத்த ஜனாதிபதித்தேர்தலில்தனக்குதமிழ் மக்களிடம் இருந்து வாக்குகளைப் பெற்றுத்தர முடியாது என்பதை அரசுத் தலைவர் கனகச்சிதமாகப் புரிந்துகொண்டிருக்கிறார். அதனை அவர் தனது கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே நாடி பிடித்திருப்பார். அதேநேரம் அருண் ஊடாக வரக்கூடிய கொஞ்ச நஞ்ச வாக்குகளையும் அவர் இழக்க விரும்பவில்லை. அதனால் பொத்தம் பொதுவாக கட்சிமறுசீரமைப்புநடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. ஆனால், அது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்தத் தீர்மானங்களும் எடுக்கப் படவில்லைஎன்றுதெரிவித்துவிட்டுக் கடந்துவிட்டார்.

இதன் மூலம் அவர் இரண்டு பக்கங்களில் காய்களை நகர்த்து கிறார். ஒன்று கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் அருணினால் ஏற்பட்டுள்ளஅதிருப்தியைமடைமாற்றுவது இரண்டாவது ஏற்கனவே கட்சியின் மாவட்ட அமைப்பாளராக இருக்கக்கூடியவரான விஜயகலா மகேஸ்வரன் தொடர்ந்தும் இப்படியே இருந்தால் அவரின் மாவட்ட அமைப்பாளர் பதவி நெருக்கடிக்குள்ளாகும் என்ற எச்சரிக்கையை விடுப்பது, அதன் மூலம்தேர்தலில்தனக்குஆதரவாக அவரையும் சுறுசுறுப்பாக இயங்க வைப்பது. ரணிலின் இந்தப் பருப்பு யாழ்ப்பாணத்தில் வேகுமா என்பது வேறுவிடயம்.

கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளை செயலாளர் பாலித ரங்க பண்டாரவேகவனித்துவருகின்றார் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப்பகுதிகளுக்கும்சென்று கட்சி மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டவர் அவரே. ஆனால் அருண் சித்தார்த்தின் நியமனம் அவரால் மேற்கொள்ளப்பட்டதல்ல. அப்படிப் பார்த்தால் இந்த நியமனம் கட்சியின் உத்தியோகபூர்வ நியமனமே அல்ல. எனவே அப்படியொரு நியமனம் கட்சியால் வழங்கப்படவேயில்லை என்றுதான் ரணில் பதிலளித்திருக்கவேண்டும். ஆனால் அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் ஏதொவொருபதிலையேதனதுகட்சிக்காரர்களுக்கே தெரிவித்து விடயத்தைக் கடந்துவிட்டார் ரணில். இப்போது அருண் சித்தார்த் கட்சியின் மாவட்ட அமைப்பாளராஇல்லையாஎன்றால், ''இருக்கிறார் ஆனால் இல்லை'' என்பதுதான் ரணிலின் பதில்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பெரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரமாக மாற்ற நான் அனைவரையும் அழைக்கிறேன்.

யாழ்ப்பாணம் - ஒட்டகப்புலம் பகுதியில் நேற்று நடைபெற்ற 'உறுமய' காணி உரிமம் வழங்கும் வேலைத்திட்டத்தின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இரண்டுமில்லியன்மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பணத்தில் 408 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அடையாள ரீதியாக காணி உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

இதற்கு இணையாக யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழிருந்த காணிகளை விவசாயிகளுக்கு கையளிக்கும் நிகழ்வும் நேற்று பலாலி விமானப் படை தளத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவினால் காணிகளை கையளிப்பதற்கானஉத்தியோகபூர்வ ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவற்றை யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் மரதலிங்கம் பிரதீபனிடம் கையளித்தார்.

அதற்கமையவாலிகாமம்வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவின் 5 கிராம சேவகர் பிரிவுகளுக்குச்சொந்தமான 235 ஏக்கர் காணி பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதோடு, இந்த காணிகள் அரசின் விவசாய நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டத்திற்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் விதைப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. அதனையடுத்து காணி உரிமை பெற்றவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நினைவாக மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார்.

அவர் அங்கு ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது:

அரசர்களின் காலத்தில் காணி உரிமை மக்களிடமே காணப்பட்டது. பிரித்தானியர் காலத்தில் தரிசு நிலச் சட்டத்தின்கீழ்ஆட்சியாளர்களினால் காணிகள் அபகரிக்கப்பட்டன. அதன்படி நாட்டின் 80% காணிகள் அரசுக்குச் சொந்தமானது. அந்த காணிகளுக்கான அனுமதிகளை மக்களுக்கு வழங்கியிருந்தாலும் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால்மக்களிடமிருந்துபெறப்பட்ட காணிகளின்உறுதிகளைமக்களிடம் மீளக்கையளிக்க எதிர்பார்க்கிறோம். அதனால் அனைவருக்கும் காணி உரிமம் வழங்கத் தீர்மானித்தோம்.

எந்த இனத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும்அனைவருக்கும்காணி உரிமை கிடைக்க வேண்டும். அதற்காக உறுமய வேலைத்திட்டம் அண்மையில் தம்புளையில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஒரு சிலருக்கு மாத்திரம் அதன் பலன் கிடைத்திருந்தாலும் ஜீன் மாதமளவில் அந்த வேலைத் திட்டத்தினை முழுமையாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

விவசாயத்தைநவீனமயமாக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளோம். இதற்காகஒவ்வொருமாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகத்தை தெரிவு செய்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் கோப்பாய்தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்த மாகாணம் நவீன விவசாயத்தைப் பெறுகிறது. அதேசமயம் வருமானமும் அதிகரிக்கிறது.

போரின்பின்னர்பெருமளவிலான காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து எடுக்கப் படவேண்டியிருந்தது. இதுவரை 31,000 ஏக்கர் அரச காணிகளும், 24,000ஏக்கர்தனியார்காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 63,000ஏக்கர்விடுவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த 1800 ஏக்கர் அரச காணி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 856 ஏக்கர் தனியார் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2600 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

2600 ஏக்கர் அரச காணிகளையும் 68 ஏக்கர் தனியார் காணிகளையும் விமானப்படை விடுவித்துள்ளது. மொத்தம் 2600 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர், 101 ஏக்கர் காணி மக்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று 234 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பல கிராமங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு வனப் பாதுகாப்புத் துறையினர் வனப் பாதுகாப்புப் பகுதிகள் என பெயரிட்டிருந்தனர். 1985 வரைபடத்தின்படிசெயற்பாடுகளைத் தொடர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

இந்த இடத்தின் காணி உரிமையாளர்களும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து பலாலி ஸ்மார்ட் விவசாய வேலைத்திட்டத்தை (Palali Smart Agriculture) ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் நவீனவிவசாயத்திட்டத்தில்மீண்டும் உரிமையாளர்களால் பயன்படுத்தப்படவேண்டும்என்று அறிவுறுத்தியுள்ளோம். இதை அவர்களால் தனியாகச் செய்யமுடியாது என்பதால், அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க முப்படைகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.மேலும், அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக உயர்தர நிறுவனங்களின்பங்களிப்பும்வழங்கப்படுகிறது. மேலும், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ்அறக்கட்டளையின்ஆதரவும் பெறப்படுகிறது.

இந்தக் காணிகளை ஒதுக்குவதற்கும் அதே நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த பண்ணை இந்த இடத்தில் பராமரிக்கப்படவேண்டும். மேலும், முழு இலங்கைக்கும் முன்மாதிரி பண்ணையாக அது இருக்கவேண்டும்.

அத்துடன், வடக்கில் புதிய வேலைத்திட்டத்தையாழ்ப்பாணத்தில் தொடங்குகின்றோம். போரின்ன் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளை நாம்தற்போது தீர்த்துவருகின்றோம். மேலும்நாங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆரம்பித்தோம். அதனுடன் நாம் மட்டுப்படுத்தவில்லை. மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். மேலும் அவர்களின் வருமான மூலங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, இந்த மாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறோம்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம்வரை விவசாயத்தை ஊக்குவிக்கவும், இந்த மாகாணத்தில் உள்ள பெரும் சூரிய சக்தி மற்றும் காற்றாலைசக்தியைபயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். அதற்கு இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதன் மூலம் சுற்றுலாத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலையும்ஊக்குவிக்கமுடிகிறது. மேலும், முதலீட்டுவலயங்களுக்கும் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 05, 10 வருடங்களில் இந்தசெயற்பாடுகளைநடைமுறைப் படுத்தி வடக்கிற்கு வலுவான பொருளாதாரத்தை வழங்குவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். இலங்கையின் வடக்கை ஒருபெரிய பொருளாதாரமாக மாற்ற நான் அனைவரையும் அழைக்கிறேன் - என்றார்.

## நெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெல்லுக்கானஉத்தரவாதவிலை நிர்ணயிக்கப்படாமல் இருப்பது விவசாயிகள் எதிர்கொள்ளும் பிராதான பிரச்சினையாக காணப் படுகிறது.பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆட்சியில் எடுக்கப்பட்ட முட்டாள்தனமான தீர்மானத்தினால் நாட்டின் விவசாயத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்தது.

இரசாயனப்பசளைக்குப்பதிலாக சேதனப் பசளைத் திட்டத்தை அமுல்படுத்தியதால் விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். உலகில் எந்த நாடுகளும் எடுக்காத தீர்மானத்தையே ராஜபக்ச அட்சி செயற்படுத்தியதால்விவசாயத்துறை முழுமையாகவீழ்ச்சியடைந்துள்ளது.

2019 முதல் 2022 வரையான காலப்பகுதியில் சிறு மற்றும் பெரும்போக விளைச்சல்கள் வீழ்ச்சியடைந்தன. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரும்போகத்தில் 23 ஆயிரம் மெற்றிக் தொன், சிறுபோகத்தில் 18 ஆயிரம் மெற்றிக் தொன் என்ற அடிப்படையில் நெல் விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலை இல்லாத காரணத்தால்விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. விவசாயிகளின் செலவுக்கு ஏற்றாற் போல் நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும். ஆகவே நெல் கொள்வனவுக்கு ஆட்சியாளர்கள் விசேட பொறிமுறைகளை செயற்படுத்த வேண்டும்.

நெல் அறுவடை செய்யும் காலத்தில் அரிசி இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆனால் இந்த ஆண்டு மாத்திரம் 30 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திகளைநெருக்கடிக்குள்ளாக்கி மொத்த இறக்குமதியாளர்கள் பயனடையும்வகையில்வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரநெருக்கடிக்குதீர்வு கண்டு விட்டோம் என்று ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப் படவில்லை. ஆகவே பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளோம்என்றுபொய்யுரைக்காமல், நெல்லை கொள்வனவு செய்ய நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

raphe) என்பது இந்து சமுத்திரத்தை மையமாகக் கொண்ட ஒரு சர்வதேச ஆராய்ச்சி அமைப்பாகும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே அதன் நிறுவனர் ஆவார்.

உலக அரசியல் ஒழுங்கை மறுவடிவமைக்கும்இந்துசமுத்திரம், பசுபிக் கடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிராந்தியங்களில் புவிசார் அரசியல், புவிசார் பொருளாதார மற்றும் கடல்சார் வளர்ச்சிகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும்பகுப்பாய்வுகளைச்செய்தல், மேம்படுத்துதல்' என்பனவே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜப்பான் சர்வதேச அளவில் எதிர்கொள்ள வேண்டியிருந்த சவாலான சூழ்நிலையை தூதுவர் தனது உரையில்நினைவுகூர்ந்தார்.

உலகமே ஜப்பானுக்கு எதிராக நின்றபோது, மறைந்த முன்னாள் ஜனாதிபதிஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கூற்று காரணமாக, போருக்குப் பின்னரான காலப்பகுதியில்ஜப்பான் மீண்டும் சர்வதேச சமூகத்துடன் இணைவதற்குவழியமைத்ததையும் தூதுவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தை ஜப்பான் அந்நாட்டின் முன்னேற்றம் மற்றும் மீள் கட்டமைப்புக்காக பயன்படுத்திக் கொண்டதெனவும் கூறினார். அன்று தொடக்கம் இன்று வரையில் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நட்புறவு காணப்படுவதோடு, அந்த நட்புறவைஇருநாட்டுதலைவர்களும் மேலும் வலுவாக முன்னெடுத்துச் செல்கின்றனர் எனவும் ஜப்பான் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனானவேலைத்திட்டத்திற்குஅமைய பொருளாதார சீர்திருத்தங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் இலங்கை, ஜப்பானை முன்மாதிரியாக கொண்டு நாட்டில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஜப்பானை போன்று போட்டித் தன்மை மிக்க தொழில் துறையை கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர், போட்டித் தன்மை நிறைந்த ஏற்றுமதி கைத்தொழில்களை உருவாக்குவதற்காக தொழில் கொள்கைகளை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும், அதன் கீழ் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையில் ஆளும் தரப்பு முன்னெடுத்துவரும் ஊழல் தடுப்பு முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த மிசுகோஷி ஹிடேயாகி, அந்த முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவளிக்கும்என்றும்குறிப்பிட்டார்.

இலங்கையின் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை வலுப்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் வேலைத் திட்டத்தின் கீழ்ஜப்பான் உதவிகளை வழங்கும் என்றும், இலங்கையின்அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட பல்வேறு முயற்சிகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புநிறுவனம் (மூஹுளீபு) உள்ளிட்ட நிறுவனங்களின் ஊடாக ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக ஜப்பானின் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகும்என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரையின் பின்னர், ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி,ஐக்கியநாடுகள்அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின்உபவேந்தரும், சிரேஷ்ட பேராசிரியருமான எச். டி. திரு. கருணாரத்ன ஆகியோரி பங்குபற்றலுடன் அறிவியல் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இக்கலந்துரையாடலை கலாநிதி கணேசன் விக்னராஜா வழிநடத்தினார்.

## குறைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நன்கு அறிவோம். இதனை விவாதிக்கப் போவதில்லை. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் விவசாயத்துறையை மேம்படுத்த விசேட நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாயத்துறையைநவீனமயப் படுத்தாவிட்டால் எதிர்காலத்திலும் விவசாயத்துறைபெரும் எதிர்விளைவுகளைஎதிர்கொள்ளும். விவசாயத் துறையை நவீனமயப்படுத்த உலக வங்கி ஒத்துழைப்புவழங்கவுள்ளது. விவசாயத்துறை மேம்பாடு தொடர்பில் துறைசார் தரப்பினருடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

2022ஆம் ஆண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். நெல் கொள்வனவுக்கு விவசாயத் துறை அமைச்சு மானியம் கோரியுள்ளது. உரிய நேரத்தில் நதி ஒதுக்கப்படும்.பெரும்போக விவசாயத்தில்ஒருஇலட்சம்மெற்றிக் தொன் நெல்லை அரசு கொள்வனவு செய்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டை இலக்காகக் கொண்டு ஏழ்மை மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோ கிராம் அரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டமட்டத்தில்85மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய 11 பில்லியன் ரூபாஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 27 .4 இலட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோகிராம் அரிசி வழங்கப்பட்டது. இந்த முறையும் சுமார் 27 இலட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக முன்னேற்றமடையும் போது அதன் பயன் நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும். ரூபாயின் பெறுமதி உயர்வடைந்துள்ளது. ஆகவே இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு வர்த்தகத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. புத்தாண்டு காலப்பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# வடக்கு-கிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகள் மனோ கணேசன் எம்.பியுடன் சந்திப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன்எம்.பியை, வடக்குகிழக்கின் மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழு சந்தித்து உரையாடியது.

கொழும்பில் மனோ கணேசன் எம்பியின் இல்லத்தில், நிகழ்ந்த இந்த சந்திப்பில் மக்கள் மனு குழுவின் சார்பில் இணைப்பாளர் ஏ. ஜதீந்திரா, எஸ்.எஸ். குகநாதன், எஸ். மகாலிங்கசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இதுபற்றி ஊடகங்களுக்கு கூறியவை வருமாறு -

எமதுசந்திப்புமிககாத்திரமாகநடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள் அல்லது நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் சிங்கள பிரதான கட்சி தலைவர்களுடன், தமிழ் தேசிய பிரச்சினை தொடர்பில், மாகாணசபைகள் என்ற அடிப்படையில் பொது குறைந்த பட்ச உடன்பாட்டைக் காண்பது தொடர்பில் கலந்து உரையாடபட்டது.

வடக்கு கிழக்கில் மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுடன், குறைந்த பட்ச உடன்பாட்டைக் காணும் சிங்கள பிரதான கட்சிகள், தலைவர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அந்த உடன்பாட்டை இடம்பெற செய்ய வேண்டும் என கலந்துரையாடினோம். எதிர்வரும் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதி தேர்தலா, அவ்வாறாயின் சிங்கள பிரதான கட்சி வேட்பாளர்கள், பொது தமிழ் வேட்பாளர் ஆகிய விடயங்கள் பற்றியும் கலந்து உரையாடினோம்.

"வாக்களியுங்கள், ஆட்சிக்கு வந்த பிறகு பார்ப்போம்" என்ற நிலைபாட்டுடன் தமிழ் மக்கள் மத்தியில் வந்து வாக்கு கோர சிங்கள பிரதான கட்சிகள், கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு இனிமேல் இடம்தர முடியாது என்ற பொது நிலைபாட்டை பற்றியும் உரையாடினோம்.

தமிழ் முற்போக்கு கூட்டணியால், மலையகத் தமிழர் தொடர்பில் சமூக நீதி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து சிங்கள பிரதான கட்சிகளுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி கலந்து உரையாடத் திட்டமிட்டுள்ளது.

எமது ஆவண நிலைப்பாடுகள், அந்தந்த கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம்பெறுவதைப் பொறுத்தே எமது நிலைப்பாடு அமையும் என்ற முடிவை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம் என்பதை நான், வடக்குக் கிழக்கு மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு



எடுத்துக் கூறினேன்.

ஈழத்தமிழ் சகோதரர்களின் குறைந்த பட்ச அபிலாஷைகளை நடைமுறை சாத்தியமான முறையில் விட்டுக்கொடுக்காமல் முன்னெடுக்கும் வடக்கு கிழக்கின் மக்கள் மனு சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் எனவும் நான் உறுதி அளித்தேன். - என்றுள்ளது.

(05)

# பள்ளிவாசல்களின் ஊழியர்களுக்கும் விசேட கொடுப்பனவுகள் வழங்குக

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பள்ளிவாசல்களில்கடமையாற்றும் மௌலவிமார்கள், கதீப்மார்கள், முஅத்தின்மார்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குமாறு அனைத்து பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் ஃ நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முஸ்லிம்சமயபண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்உதவிப்பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

வக்ப் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பள்ளிவாசல்களில் கடமையாற்றும் கண்ணியமிக்க மௌலவிமார்கள், கதீப்மார்கள், முஅத்தின்மார்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு புனித ரமழான் மாதத்தில் பள்ளிவாசலில் சிறந்த முறையில் மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்காகவும் அவர்களது பல்வேறு தேவைகளை கிரமமாக நிவர்த்தி செய்வற்காகவும் ஏற்கனவே பள்ளிவாசலால் வழங்கப்படுகின்ற சம்பளத்திற்கு மேலதிகமாக போதுமான விசேட கொடுப்பனவை ரமழான் மாதத்தில் வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வகுப்சபை செயலாளர் உட்பட முஸ்லிம் திணைக்களத்தின் சகல கள உத்தியோகத்தர்களுக்கும் இதுதொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்திணைக்களம்தெரிவித்துள்ளது. (05)

# பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(சர்ஜுன் லாபீர்)

அரசசார்பற்றகிரிசாலிஸ்நிறுவனம் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 175 மாணவர்களுக்கான இலவச பாடசாலை உபகரண பொதி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.



இந்தப்பாடசாலைஉபகரணப்பொதி வழங்கும் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு பிரதம முகாமைத்துவசேவைஉத்தியோகத்தர் ஏ.எம்நவாஸ், விடயத்திற்குபொறுப்பான சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரக்கீபா, சிரேஸ்ட முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் எம்.எல்.எஸ் ரெஜீனா, கிரிசாலிஸ் நிறுவனத்தின் திட்ட உதவி இணைப்பாளர் பி. தசதரா, திட்ட இணைப்பாளர் ஜி.ரொகான் மற்றும் கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் முப்பெருவிழா





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் முப்பெரு விழா கல்வி அலுவலக கல்விசார் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.றாஸிக் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்றுச்செல்லும்கல்முனைதமிழ்கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே.தாஸிம் ஆகியோருக்கான பணி நயப்பு , கல்முனை கல்வி வலயத்திற்கான



அடையாள அட்டை விநியோகம், கல்விசார் உத்தியோகத்தர்களுக்கானமேலங்கிவெளியீடுஆகிய மூன்று நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், ஜிஹானா ஆலிப், ஆசிரிய ஆலோசகர் திருமதி நஜிமுன்நிஸா ஆகியோர் சிறப்புரையாற்றினர்



பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்,வளவாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆசிரிய ஆலோசகர் கே.சாந்தக்குமார் நிகழ்வை நெறிப்படுத்தினார். நன்றியுரையை தமிழ்ப்பாட



ஆசிரிய வளவாளர் ஜெஸ்மி மூஸா நிகழ்த்தினார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆழமான கலந்துரையாடல் அவசியம்

**பெண் பிள்ளைகள் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடும் வயதெல்லையை 16 என்பதிலிருந்து 14ஆகக் குறைப்பதற்கு ஆளும் தரப்பு முடிவு செய்துள்ளமைக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் கிளப்பினார். இந்தச் சட்டத் திருத்த முன்மொழிவுகளை ஆளும் தரப்புத் திரும்பப் பெறவேண்டும் என்றார். இந்த திருத்தத்தை உடன் நிறுத்துமாறு நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியமும் வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவிற்கு அது கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.**

**1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கு அமைய, 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளை தனது சொந்த விருப்பத்தின் பேரில் உடலுறவு கொண்டாலும், அது பாலியல் வன்புணர்வுக் குற்றமாகக் கருதப்படும். எனினும், நீதி அமைச்சரால் தண்டனைச் சட்டக் கோவைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் மூலம் அந்த வயதெல்லையை பதின்னான்காகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

**நீதிமன்றங்களில் உள்ள பல பதின்ம வயது பாலியல் வன்புணர்வுக் குற்ற வழக்குகள் தொடர்பில் இதுவொரு பிரச்சினையாகவே உள்ளது. காதல் உணர்வுக்குள் சிக்கிக்கொள்ளும் விடலைப் பருவத்தில் அறியாமலேயே சிறுவர்கள் அல்லது சிறுமி வளர்ந்தவர் ஒருவருடன் உடலுறவு கொண்டால் அது வன்புணர்வுக் குற்றமாக வகைப்படுத்தப்பட்டு அதில் சம்பந்தப்பட்ட ஆண் தண்டிக்கப்படுகின்றான். அடிக்கடி ஊடகங்களில் இது தொடர்பான செய்திகளைப் பார்க்க முடியும். சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் கைது என்று செய்திகளில் குறிப்பிடப்படுவது, இதுபோன்று 16வயதுக்கு குறைந்த சிறுமியுடன் பாலியல் உறவு வைத்துக்கொண்டவர்களைப் பற்றித்தான்.**

**ஒருபுறத்தில் காதலர்களைப் பிரிப்பதற்கான ஆயுதமாக இந்த வயதெல்லையைப் பெண் பிள்ளைகளின் பெற்றோர் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு. மறுபுறத்தில் ஒரு பெண் கருத்தரிப்பதற்கும் ஆரோக்கியமாகக் குழந்தையைப் பெற்றெடுப்பதற்கும் குறைந்தது அவருக்கு 24 வயதாவது முடிந்திருக்கவேண்டும் என்று மருத்துவ உலகு பரிந்துரைக்கையில், 16 வயதுக்கும் 24 வயதுக்கும் உட்பட்ட பெண்கள் பாதுகாப்பற்ற பாலியல் உறவு காரணமாக இளவயதுக் கர்ப்பம் என்கிற பிரச்சினைகளில் சிக்கிக்கொள்கிறார்கள், இது தாய்க்கும் சேய்க்கும் நல்லதல்ல என்கிற கரிசனையும் உள்ளது.**

**திருமணத்திற்கு முன்பாகவோ திருமணத்திற்குப் புறம்பாகவே உடலுறவு கொள்வதை ஏற்றுக்கொள்ளாத ஒரு சமூகத்தில் சிறுவயதினரிடம் பாதுகாப்பான உடலுறவு குறித்துப் பேசுவதில் உள்ள தயக்கம் அல்லது பண்பாட்டுத் தடை இத்தகைய இளவயதுக் கர்ப்பப் பிரச்சினையைத் தீவிரப்படுத்துகின்றது என்று பெண் உரிமையாளர்களும், மருத்துவ உலகத்தினரும் சுட்டிக்காட்டுகின்றனர். இன்னொரு பக்கத்தில் காதல் வயப்படும் இருவர் உணர்ச்சிவசப்பட்டு உறவில் ஈடுபட்டபோதும் அதில் ஒருவர் மட்டும் தண்டிக்கப்படுவது நியாயமற்றது என்கிற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய நிலையில், குறிப்பாக சிறுவர்கள் இருவர் காதல் வயப்பட்டு பாலியல் உறவில் ஈடுபடுவதால் வரும் வன்புணர்வுக் குற்ற வழக்குகளில் இதுவொரு தார்மீகப் பிரச்சினையாகவே இருக்கின்றது.**

**இதன் காரணமாகவே பெண் பிள்ளைகள் பாலியலில் ஈடுபடும் வயதெல்லையை 14ஆகக் குறைக்கும் –முன்மொழிவுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், இது பெண் குழந்தைகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கிவிடும் என்றும் பெண் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு இவ்வாறு நீக்கப்படுவதன் மூலம் ஆண்களால் அவர்கள் முறைகேடுகளுக்கு உள்ளாக்கப்படுவது அதிகரிக்கும் என்றும், இதன் மூலம் இளவயதுக் கர்ப்பங்கள் இன்னும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும் என்றும் பெண் உரிமையாளர்களும் ஆர்வலர்களும் அஞ்சுகின்றனர். எனவே பெண் பிள்ளைகளுக்கு இருக்கும் சட்டப் பாதுகாப்பை நீக்கக்கூடாது என்றும் அவர்கள் கேட்கின்றனர். அவர்களின் அக்கறையிலும் நியாயங்கள் இருக்கவே செய்கின்றன.**

**எனவே உரிய தரப்புக்களுடன் கலந்துபேசி, பலதரப்பட்ட கருத்துப் பகிர்வுகளை நடத்தி, கருத்துக்களைக் கேட்டு இந்தச் சட்டத் திருத்தத்தில் பொறுமையாகச் செயற்படுவதே ஆளும் தரப்பு செய்யவேண்டியது. சமூக மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களை நுண்ணியமாகக் கொண்டிருக்கக்கூடிய இதுபோன்ற விடயங்களில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயற்படாமல் ஆழமான, விரிவான கலந்துரையாடல்களின் பின்னரே இதுபோன்ற விடயங்களில் ஆளும் தரப்பு இறங்கவேண்டும்.**

# தனிச் சுவையான நகைச்சுவை

**மலையமான்**

மனிதனுக்குச் சிந்தனை ஆற்றல் இருக்கிறது. சிரிப்பு என்ற சிறப்பும் இருக்கிறது. இது மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது. தொல்காப்பியர் மனிதனிடம் அமைந்த மெய்ப்பாடுகளைப் பற்றிக் கூறும்போது, நகையே, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்றார். அவர் நகைச்சுவையைத்தான் முதலில் கூறினார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் மூன்று வகையான சிரிப்பைச் சொன்னார். அவை முறுவலித்தல், நகுதல், சிரித்தல் என்பவை. திருவள்ளுவரும், 'சிரிக்காதவருக்கு, இந்தப் பெரிய உலகம், ஒளியுள்ள பகற்பொழுதிலும் இருட்டில் இருப்பதாக இருக்கும்' என்கிறார்.

மனித இனத்திற்கு நகைச்சுவை மிக மிகத் தேவை. ''மனித குலத்திற்குக் கிடைத்துள்ள சக்திவாய்ந்த ஆயுதம் சிரிப்பு'' என்று புகழ்பெற்ற எழுத்தாளர் மார்க் ட்வைன் கூறினார். "எனக்கு மட்டும் நகைச்சுவை உணர்வு இருந்திருக்கா விட்டால், என் வாழ்வில் எதிர்ப்பட்ட துன்பங்கள் எப்போதோ என்னை அழித்துவிட்டிருக்கும்" என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். முற்காலத்தில் மன்னர்களின் அரசவையில் நகைச்சுவை நாயகர் இருந்தனர் என்று தெரிகிறது. கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்த தெனாலி ராமனை இங்கு நினைவு கூரலாம். இக்காலத்தில் சர்க்கஸ் என்ற பொழுதுபோக்கு அரங்கத்தில் சிலர் சிரிப்பு மூட்டுவார்கள். நாடகங்களில் நகைச்சுவை இடம்பெறும். நகைச்சுவைக்கென்றே நடத்தப்படும் நாடகங்களும் இருக்கின்றன. அதுபோலவே நகைச்சுவைக்கு மட்டுமே நடத்தப்படும் தொலைக்காட்சிகளும் உள்ளன. திரைப்படங்களிலும் நகைச்சுவைக் காட்சிகளுக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது.

இலக்கியத்தில் பள்ளு, குறவஞ்சி முதலிய நூல்களில் நகைச்சுவை இருக்கும். சிலரின் நகைச்சுவை உரைகள் மேலோட்டமாக இருக்கும். சிலரின் சொற்கள் முதலில் சிரிப்பை ஊட்டும்; பின்பு சிந்தனையைத் தூண்டும். இதுவே சிறந்த நகைச்சுவை. 'பொம்பளை சிரிச்சா போச்சு, புகையிலை விரிச்சா போச்சு' என்பது ஒரு பழமொழி. இதற்கு அடிப்படைக் காரணம் உள்ளது. தண்ணீர் படிந்திருப்பதைப் போன்று மாயத் தோற்றம் அமைந்திருந்த கூடத்தில், உண்மை உணராத துரியோதனன் தன் கீழாடையைக் கையால் உயர்த்திப் பிடித்து நடக்க முயன்றான். அவனுடைய அறியாமையைக் கண்டு திரௌபதி சிரித்தாள். துரியோதனன் கடுங்கோபம் கொண்டான். பாரதப் போர் நடந்தது.

அமைதியான - மகிழ்ச்சியான வாழ்வு பறிபோனது. இதுதான், 'பொம்பளை சிரிச்சா போச்சு' என்ற பழமொழி ஆனது. சிரிப்பு என்பதற்குரிய ஆங்கிலச் சொல் ஸ்மைல். தற்போது ஸ்மைஸ் என்ற புது ஆங்கிலச் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல்லை டைரா பேங்க்ஸ் என்ற அமெரிக்கப் பெண்மணி படைத்தார். வாயால் மட்டும் சிரிப்பது ஸ்மைல். கண்ணாலும் முழு உடம்பாலும் சிரிப்பதே ஸ்மைஸ் ஆகும். குழந்தைப் பருவத்தில் சிரிப்பு அதிகமாகப் பொங்கும். இல்லற வாழ்வுப் பருவத்தில் சிரிப்பு வறண்டு போகும். சிலரின் முதுமைப் பருவத்தில் சிரிப்பு செத்துவிடும். சிரிக்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

மனமகிழ்ச்சியின்போது எண்டோர்ஃபின் என்னும் ஹார்மோன் சுரக்கிறது. இது உள்ளம் உற்சாகமாய் இருக்க உதவுகிறது. சிரிப்புக்கு எதிர் நிலையான மன இறுக்கம் இருக்கும்போது, கார்டிசோல் என்னும் ஹார்மோன் சுரக்கிறது. இது உடல்நலக் கேட்டுக்குக் காரணமாய் அமைகிறது. சிரிப்பு காணமாக உடம்பில் நடைபெறும் நிகழ்வு பற்றிச் சில கோட்பாடுகள் கூறப்படுகின்றன.

நீக்கக் கோட்பாட்டின்படி நம் உணர்ச்சிகள் சிரிப்பு மூலம் வெளிப்படுகிறது. இணக்கக் கோட்பாடு, சிரிப்பையும் அதற்கான சூழ்நிலையையும் புரிந்து கொள்ள உதவுகிறது. உயர்வுக் கோட்பாட்டின்படி, மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்பது தெரிகிறது. அரசியலாளர்களுக்குச் சிறந்த பேச்சாற்றலே மூலதனம். அவர்களின் சிரிப்பு, துணை மூலதனம். நோயாளியை வரவேற்கும் மருந்துவருக்கு அவருடைய புன்முறுவல் முதன்மையான எளிமையான சிறந்த மருந்து. மழலைப் பள்ளி ஆசிரியையின் முகத்தில் மலர்நத சிரிப்பு மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு மடல். காதலியின் இளமை முகத்தில் முதலில் தோன்றும் ஒலிப்பு இல்லா மென்முறுவல், அறிமுகக் கடிதம். மனைவியின் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாத கணவனின் மௌனச் சிரிப்பு அவனுடைய பாதுகாப்புக் கேடயம். துன்பம் தாக்கும்போது, எழும் சிரிப்பு. அதை வெல்லும் ஆயுதம். இது திருவள்ளுவர் கூறிய வழிமுறை. கசப்பான உண்மையைச் சொல்ல வேண்டிய கட்டாயம் உருவாகும்போது, நகைச்சுவைச் சூழலை ஏற்படுத்தினால் இடர்ப்பாடு எழாது.

இது பெர்னாட்ஷா சொன்ன உத்தி. திருக்குறளார் முனிசாமி என்ற சொற்பொழிவாளர் முன்பு பட்டி தொட்டி களிலும் பேசி வந்தார். அவருடைய சொற்பொழிவு முழுவதும் நகைச்சுவை மிளிர்வதாக இருக்கும். கோபம் கொப்பளித்துக் கொண்டிருக்கும் நிலையில் இருந்த ஒருவன் "உனக்கு அறிவு இருக்குதா" என்று கேள்வி கேட்டுச் சீறிப் பாய்வான். ''அதை நீ வாங்கிய கடையைக் காட்டு, நானும் கொஞ்சம் வாங்கிக் கொள்கிறேன்'' என்று எதிராளி பதில் சொல்வான் என நகைச்சுவை தோன்றும்படி, திருக்குறளார் கூறுவார். சமயத் தொண்டு புரிந்த கிருபானந்தவாரியார் சுவாமிகளின் உரையிலும் நகைச்சுவை கலந்து வரும். அவரைப் போற்றுவதறகாகக் கையில் மாலை ஏந்தி ஒருவன் வேகமாக வந்தான். அவன் வாரியார் சுவாமிகளைப் பார்த்தான். அவருடைய கழுத்தில் மாலை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. வந்தவன் தயங்கி நின்றான். அவனுடைய மன நிலையை வாரியார் சுவாமிகள் உணர்ந்தார். அவர் தன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றினார். அருகில் இருந்தவரிடம் அதைக் கொடுத்தார். வந்தவன் அதைக் கண்டான். அவருடைய வெறுங்கழுத்தில் தான் கொண்டுவந்த மாலையைச் சூடடினான்; மகிழ்ச்சி அடைந்தான். அவரை வணங்கி விட்டுச் சென்றான்.



அப்போது வாரியார் சுவாமிகள், அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, "இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்மிடம் இருப்பதை யாருக்காவது கொடுத்தால்தான் அடுத்தவர் நமக்குக் கொடுப்பார்" என்றார். இந்த நயமான பேச்சு சிரிப்பை எழுப்பியது; சிந்தனையையும் எழுப்பியது. கவிஞர் கண்ணதாசன் ஒரு கூட்டத்தில் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், நீண்ட நேரம் கழித்து வந்தார். மக்கள் அவர் மேல் வருத்தத்துடன் இருந்தார்கள். கண்ணதாசன் அதை உணர்ந்தார். அவர் பேசத் தொடங்கியவுடன் ''எனக்குப் பிடித்த மதம் ஒன்று உள்ளது. அது யாருக்காவது தெரியுமா'' என்று கேட்டார். ஒருவரும் விடை கூறவில்லை. அவரே ''எனக்குப் பிடித்த மதம் தாமதம்'' என்று கூறினார். கைத்தட்டல் மேற்கூரையைத் தாக்கியது; மக்களின் வருத்தத்தைப் போக்கியது.

இங்கிலாந்தில் லோமாலிண்டா பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்குச் சிரிப்பு பற்றிய ஆய்வு நடந்தது.

காலைக்கதிர் Kalaikkathir

# மாவடிப்பள்ளியில் ‘விழிக்கு ஒளி’ திட்டம் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்




(எம்.வை.அமீர்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்பின் ஏற்பாட்டில்‘ விழிக்கு ஒளி’ எனும் தொனிப்பொருளில் மாவடிப்பள்ளி கலாசார மற்றும் சமூக மேம்பாட்டு அமைப்பின் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை மாவடிப்பள்ளி




அஷ்ரப் மஹாவித்தியாலயத்தில் மாவடிப்பள்ளிஜும்ஆபள்ளிவாசலின் தலைவர் மனாப் தலைமையில் இடம்பெற்றது.

(05)

# தனிச் சுவையான நகைச்சுவை

தினமும் அரைமணி நேரம் நகைச்சுவைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால் மன இறுக்கம்தரும்ஹார்மோன்களின்செயற்பாடு குறைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்றொரு ஆராய்ச்சி பின்வரும் முடிவை அறிவித்தது. நம் உடம்பில் சி. எதிர்வினைப் புரதம் உள்ளது. இது அதிகரித்தால், இதயம் தொடர்பான நோய்கள் வரும்.

நாள்தோறும்நகைச்சுவைக்காட்சிகளைப் பார்ப்பதாலோ, நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் படிப்பதாலோ ’சி’ - எதிர்வினைப் புரதம் 66% விழுக்காடு குறைந்து விடும் என்பதே அந்த ஆய்வு முடிவு. இப்படி நகைச்சுவை நல்ல மருத் துவப் பலன்களையும் அளிக்கிறது. மனமகிழ்ச்சிதரும்நகைச்சுவை, முகத்திலுள்ள தசை நார்களுக்குப் பலம் ஏற்றுகிறது. அது தினமும் புதிய நண்பர்களைத் தருகிறது. அதன் காரணமாக நினைத்ததை எளிதாகச் சாதிக்க முடிகிறது. டேல் கார்னீஜி என்பவர், சுய




முன்னேற்ற நூல்களை எழுதிய புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர். அவர் ‘கவலை யை விடு; வாழ்வைத் தொடங்கு’ என்ற நூலை எழுதி வெளியிட்டார். நகைச்சுவையின் சிறப்பை அவர் அந்த நூலில் குறிப்பிட்டார்.

நகைச்சுவை, ஒருவனை உயர்த்தும். எல்லா இடத்திலும் நகைச்சுவையாளனுக்கு வரவேற்பு கிடைக்கும். அது அவனுக்குத் தலைமைத்தன்மையும்தரும். அலுவலகத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் நகைச்சுவையாளராக இருந்தால் அவருக்கு முழு ஒத்துழைப்பு கிட்டும். அவருடைய திட்டுதலும் வசவுச் சொற்களும் பிறரிடம் பாதிப்பை ஏற்படுத்தாது. தொழில் துறையிலும் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். இன்றைய வாழ்வியலைச் சுற்றி அல்லல் அலைகள் ஆர்ப்பரித்துக் கொண் டிருக்கின்றன; துன்ப வேல்கள் இதயத்தைத் துளைத்துக் கொண்டிருக்கின்றன; ஏமாற்ற முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காத்துக் கொண்டிருக்கின்றன; நயவஞ்சகப் புலிகள் பாய்வதற்குப் பதுங்கிக் கொண்டிருக்கின்றன; தோல்வி வல்லூறுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. துரோக நாகப்பாம்பு படம் எடுத்துக் கொத்துவதற்கு நேரம் பாத்துக் கொண்டிருக்கிறது. இந்தச்சூழலில் நம்பிக்கை என்ற நல்ல தேவதை, மனிதனின் அருகில் தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறது. அதற்கு உறுதுணையாக சிறிய பாதுகாப்பாக நகைச்சுவை ஓர் ஓரத்தில் இருக்கிறது. மன இறுக்கப் புதைகுழியில் விழுந்து வாடும் மனிதனுக்குஅதுஉதவும்கரத்தைநீட்டுகிறது.

உளவியல் என்பது அண்மையில் தோன்றிய புதிய துறை. இன்று உளவியல் துறையில்மருத்துவர்கள்உதவிசெய்கிறார்கள். வருங்காலத்தில் நகைச்சுவைத் துறை என்ற ஒன்று தோன்றும். அத்துறையிலும் அருந்தொணடு புரிவதற்கு வல்லுநர்கள் வரக்கூடும். இது சிரிப்புக்குரிய செய்தி அல்ல, சிந்தனைக்குரிய தகவல்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Paneer & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# நிந்தவூர் அல்-அஷ்ரகில் பாரம்பரிய மரங்கள்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் முன்னாள் அதிபர் களாகக் கடமையாற்றிய எஸ்.எச்.ஏ. அலியார் மற்றும் ஐ.எல். லத்தீப் ஆகியோர் பாடசாலைக்கு வருகை தந்து தற்போதைய அதிபர் ஏ .அப்துல் கபூர் அவர்களைச் சந்தித்து பாடசாலையின் தற்கால விடயங்கள் பற்றி கலந்துரை யாடல் செய்தனர். அத்துடன் பாடசாலை யின் நிந்தவூர் பாரம்பரியங்களை நினைவு கூருமுக மாக பல செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் முன்வந்தனர்.

அவ்வகையில் நிந்தவூரின் வரலாற்று பிரதிபலிப்பைநினைவுகூரத்தக்கபனிச்சமரத்தையும், பெறுமதிமிக்க கருங்காலி மரத்தையும் கொண்டு வந்து பாடசாலையில் நாட்டினர்.

பாடசாலையின் மீது மதிப்பு கொண்டு வருகை தந்த முன்னாள் அதிபர்கள், மரக்கன்றுகளை நடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி, பராமரிப்பை பாரமெடுத்த ஆசிரியர் வை.எம். அஷ்ரப்

அவர்களுக்கும், கல்வி சாரா ஊழியர் ஏ.ரம்ஸான் அவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் ஏ. அப்துல் கபூர் உட்பட பிரதி, உதவி அதிபர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொன்டனர். (05)



# சர்வதேச வனாந்திர தினம்



வியாழக்கிழமை சர்வதேச வனாந்திர தினமாகும். இந்தத் தினத்தையொட்டி கோமரன்கடவல வட்டாரவனபாதுகாப்புகாரியாலயத்தால் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

மனிதர்கள் சுகமாக வாழ்வதற்கு வனாந்தரங்கள் பெரிதும் உதவி செய்கின்றன. இதன் அடிப்படையில் வில்பனாகுளம் வனப்பகுதியில் மர நடுகை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கோமரன் கடவல தேசிய பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன், வன விலங்கு அதிகாரிகள், சுற்றாடல் பாதுகாப்பு சபை அதிகாரிகளும் பங்கு கொண்டு மரம் நட்டு நிகழ்வை சிறப்பித்தனர்.



வனாந்தரத்தைப் பாதுகாப்பதன் மூலமாகவே ஆரோக்கியமாகவும் சுகாதாரமாகவும் வாழக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன் அடிப்படையில் வியாழக்கிழமைமரநடுகைதின திட்டம் மேற்கொள்ளப்பட்டது. (05)



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளையிலும் பெற்றுக்கொள்ள கூடிய வசதிகள் வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் சாரதி அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 முதல் விமான நிலையத்திலிருந்து வெளியில் வரும்போதே சாரதி அனுமதிப்பத்திரத்தைபெற்றுக்கொடுப் பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படு மெனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் பணிப்புரைக்கு அமைய வீதி விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையிலான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள் கின்றனர் என்று அறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை காப்புறுதிஒழுங்குபடுத்தல்ஆணைக் குழுவிற்கும் காப்புறுதி நிறுவனங் களுக்கும் இடையில் இடம்பெற்ற தொடர்கலந்துரையாடலின்பயனாக நீதிமன்ற நடவடிக்கையின்றி விரைவாக இழப்பீடு வழங்கும் வேலைத் திட்டம் மார்ச் 1 முதல் தொடங்கப்பட்டது. மார்ச் 1 ஆம் திகதிக்கு பின்னரான விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம், அதன் எந்தவொரு கிளையிலிருந்தும் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாறாக பாதிக்கப்பட்டவர் மேலதி கமான இழப்பீட்டுத்தொகையைபெற எதிர்பார்க்கும் பட்சத்தில் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை நாட வேண்டும். இந்த நடவடிக்கை குறித்து இலங்கை பொலிஸார் மற்றும் பிரதேச செயலாளர்கள் கிராம சேவை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவுத் திணைக்களம், விமானப்போக்குவரத்து சேவைகள் அதிகார சபை மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியன இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் விமான நிலையத்தில்விண்ணப்பிப்பதற்கும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி மாதமொன்றுக்கான சாரதி அனுமதி பத்திரங்களுக்கு 25 டொலர்களும், மூன்று மாதங்களுக்கான சாரதி அனுமதி பத்திரங்களுக்கு 50 டொலர்களும், 6 மாதங்களுக்கு 75 டொலர்களும், ஒரு வருடத்திற்கு மேலான அனுமதி பத்திரங்களுக்கு 200 டொலர்களும் அறவிடப்படவுள்ளது.

ஏப்ரல் 10 முதல் திறன் மதிப்பீட்டு புள்ளிகள் வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் வரையில், போக்குவரத்து விதி மீறல்களுக்கு அபராதம் செலுத்தும் தபால் நிலையங்கள், குற்றத்தின் தன்மை, உரிய பொலிஸ் நிலையம், சாரதி அனுமதிப் பத்திர விவரம் மற்றும் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட தகவல்கள் தேசிய வீதி போக்குவரத்து அதிகார சபையின் தகவல் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளன.

அந்த தரவுகளின்படி, விபத்து குறித்த குறுஞ்செய்தி மற்றும் விபத்து தொடர்பான காணொளிகள் தேசிய வீதிபோக்குவரத்துபாதுகாப்புஅதிகார சபையினால் உரிய தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலம் அனுப்பப்படும்.

வீதி விபத்துகளைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். அதன்படி, கல்வி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவை இணைந்து ஏப்ரல் 3ஆம் திகதி முதல்ஒவ்வொருபாடசாலைகளிலும் வீதி பாதுகாப்பு ஒன்றியங்களை

தொடர்ச்சி 9ம் பக்கம்....




## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்வேறு படிமுறைகளின் கீழ் இத்திட்டத்திற்காக பாடசாலை மாணவர்களுக்குஜனாதிபதிபதக்கம் வழங்குவதற்கானநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதக்கம் வெல்வோர் சாரதி அனுமதி பத்திரத்திற்கான எழுத்துமூல பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். கல்வியற் கல்லூரிகளிலும் வீதி போக்குவரத்து தொடர்பிலான ஒன்றியங்களை நிறுவி மேற்கூறியது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்திருக்கிறோம்.

அதற்கு மேலதிகமாக வீதி விதிமுறைகள் மற்றும் வீதி போக்கு வரத்துதொடர்பிலானஅறிவைபாலர் பாடசாலை மட்டத்தில் பெற்றுகொடுப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

தேசிய வீதிப் போக்குவரத்து அதிகார சபை 1998 இல் நிறுவப்பட்டது. தற்போதைய நிலைமைகளுக்கமைய அதற்காக ஏற்பாடுகளை செய்ய முடியாது என்பதால் தேசிய வீதிப் போக்குவரத்து அதிகார சபையை வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவாக மாற்றியமைப்பதற்கான அங்கீகாரத்தை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கொண்டுள்ளார். அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பித்து நிறைவேற்றிக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அமைச்சரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில்உணவுதவிர்ப்பு போராட் டத்தில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்களுக்கும் ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை முதல் நூற்றுக்கணக்கான மீனவர்கள் அங்கு ஒன்று கூடினர்.

பின்னர் மீனவர்கள் ஒன்றிணைந்து இந்திய துணைத் தூதரகத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு முற்றுகை போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சில மணி நேர போராட்டத்தின் பின்னர்ஒருசிலமீனவர்கள்மாத்திரம் இந்திய துணைத் தூதரகத்துக்குள் பேச்சுக்காக அழைக்கப்பட்டு கலந்துரையாடியதை அடுத்து மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர்போராட்டம்இடம்பெறும் இடத்திற்குவருகைதந்தகடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுடன் கலந்துரையாடி உணவு தவிர்ப்பு போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

கடற்றொழில் அமைச்சரும், இலங்கை கடற்படையும் விடும் தவறுகளாலேயேஇந்தியமீனவர்கள் இலங்கைக்குள் வருவதாக இந்திய துணைத் தூதரக அதிகாரி கூறினார் என்றுமீனவர்கள்தெரிவித்துள்ளனர்.

## பெண்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்விஜயதாசராஜபக்சவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கு அமைய, 16 வயதுக்குட்பட்ட பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில் உடலுறவு கொண்டாலும், அது கற்பழிப்பாகக் கருதப்படும். எனினும், நீதி அமைச்சரால் முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் மூலம் அந்த வயது எல்லையை 14 வயது வரை குறைக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றபெண்உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் என்ற வகையில் தண்டனைச் சட்டக் கோவையின் 364 ஆம் பிரிவுக்கான உத்தேச திருத்தம் தொடர்பில் தனது கடுமையான கவலையை வெளியிடுவதாக குறிப்பிட்டுள்ள ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, 364ஆம்பிரிவுக்கான உத்தேச திருத்தம் தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்த விவரங்களை கடிதம் மூலம் முன்வைப்பதாக அறிவித்துள்ளார்.

தண்டனைச்சட்டக்கோவையின் 364ஆம்பிரிவைதிருத்துவதற்கான உத்தேச சட்டமூலத்தை மீளப்பெறுமாறுநாடாளுமன்றபெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் சார்பில் கேட்டுக்கொள்வதாக சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்நாட்டின் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குமாறும் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக நீதியை உறுதிப்படுத்துமாறும் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் சார்பில் மிகவும் ஆர்வத்துடன் கேட்டுக்கொள்வதுடன் இது தொடர்பில் மேலதிகத் தகவல்கள் அல்லது மாற்று முன்மொழிவுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமது ஒன்றியம் எந்த நேரத்திலும் தயாராகஉள்ளதாகவும்கடிதம்மூலம் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

## அதானியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்பத்திற்கு அப்பாற்பட்ட பல வெளிக்காரணங்களில்தங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச நிர்மாணத்தளம் பறவைகளின்புலம்பெயர்பாதையில் உள்ளதாகதெரிவித்துள்ளார்பேராசிரியர் செனிவிரத்ன.

கொழும்புப்பல்கலைகழகம்கடந்த நான்குவருடங்களாகசெயற்கைகோள் படங்களைபயன்படுத்தியும்ஜிஎம்எஸ் மற்றும்ஜிபிஎஸ்தொழில்நுட்பத்தை பயன்படுத்தியும் பறவைகளின் இடம்பெயர்வு பாதைகள் குறித்த விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.

இந்த தரவுகள் சுற்றுசூழல் நன்மைக்குமாத்திரமல்லாமல்சிவில் விமானப்போக்குவரத்துஆணையம் போன்றவற்றிற்கும் உதவுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் ஆராய்ச்சி மூலம் நாங்கள் இலங்கை பறவைகளின் இடம்பெயர்வுகுறித்துபலவிடயங்களை அறிந்துகொண்டோம்.உதாரணத்திற்கு சிலமன்னார்பறவைகள்ஐரோப்பாவில் முட்டையிட்டு ஆறுமாதங்களின் பின்னர்இலங்கைதிரும்புகின்றனஎன தெரிவித்துள்ளபேராசிரியர்இது25000 கிலோமீற்றர் தூர இடப்பெயர்வாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்

மேலும் சில பறவைகள் பனி ஆரம்பித்ததும் ஆர்ட்டிக்கில் முட்டையிடுகின்றனபின்னர் அவை தங்கள் குஞ்சுகளுடன் இலங்கை வருகின்றனஎனவும்குறிப்பிட்டுள்ளார்.

30நாடுகளில்இருந்து5மில்லியன் பறவைகள்இடம்பெயர்கின்றனஎனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பறவைகள்எட்டுஇடம்பெயர்வுப் பாதைகளைப் பின்பற்றுகின்றன இதில் ஒன்று மத்திய ஆசியாவில் அமைந்துள்ளது. செப்டம்பர் முதல் நவம்பர்வரைவடபகுதிகுளிர்காலத்தை அனுபவிக்கும்போது 4 மில்லியன் பறவைகள் இந்தப் பாதையைப் பயன்படுத்தி தென்பகுதிக்கு இடம்பெயர்கின்றன. பின்னர் மார்ச் ஏப்பிரலில் வடபகுதிக்கு மீண்டும் செல்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அறுவடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே தற்போது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பில் நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கிறோம்.

தற்போது விலை நிர்ணயம் செய்தாலும் அந்த விலைக்குப் பெற்றுக்கொள்ள நாட்டில் எங்கும் நெல் இல்லை. பெரும் நெல் ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்துள்ளனர்.அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரமே தற்போது நெல் அறுவடை இடம்பெறுகிறது.

விவசாயிகளிடமிருந்து நாடு ஒரு கிலோ 105 ரூபாய், சம்பா 115 ரூபாய் என பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.ஆனால்பெப்ரவரி தொடக்கத்தில் இருந்து 85, 90 ரூபாவுக்கே நெல் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தற்போது விலை நிர்ணயம் செய்தாலும் கொள்வனவு செய்ய நாட்டில் நெல் இல்லை.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்ய கடன் வழங்குவதாக தெரிவித்தாலும் அது இன்னும் இடம்பெறவில்லை. அதனால் அவர்களுக்கு நெல் கொள்வனவு செய்ய முடியாமல் போயுள்ளது. இன்னும்ஏகாதிபத்திய செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதனை கட்டுப்படுத்த ஆளும் தரப்புக்கு முடியாமல் இருக்கிறது.

நெல்லைக் கொள்வனவு செய்ய முறையானவிலைநிர்ணயம்செய்து விவசாயிகளிடமிருந்து அதனைப் பெற்றுக்கொள்ள அரச நெல் கொள்வனவு சபைக்கு முடியாமல் போயிருக்கிறது. நெல் கொள்வனவு செய்யஅவர்களிடம்பணம்இல்லை.. நெல் உற்பத்திக்கான செலவுக்கு ஏற்ற வருமானம் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. அதனால் நெல் விவசாயிகள் விவசாயம் செய்வதில் இருந்து விலகி வருகின்றனர்.

மேலும்கௌப்பி, பயறு, உளுந்து இறக்குமதிசெய்வதைதடைசெய்துள்ளதாக ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் புறக்கோட்டையில் இன்னும் மொத்த விலைக்கு இந்த பொருட்கள்விநியோகிக்கப்பட்டுவருகின்றன.இதனைக்கட்டுப்படுத்தஆளும் தரப்புக்கு முடியாமல் இருக்கிறது.

ஆளும்தரப்பின் இயலாமையே இதற்குக் காரணமாகும். விவசாயிகளைப் பலப்படுத்த எந்த வேலைத் திட்டமும்ஆளும்தரப்பிடம்இல்லை. விவசாயப் பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தை ஊக்குவிப்பதாக இருந்தால் ஆளும் தரப்பு விவசாய பொருட்களுக்கான வரியை இல்லாமலாக்கவேண்டும் என்றார்.

# வைத்தியசாலையிலிருந்து வெளியேறியவர் திடீர் சாவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஒருவர் உரியஅனுமதிகளின்றிவெளியேறிய நிலையில் திடீரென வீழ்ந்து உயிரிழந்தார். யாழ்ப்பாணம் தலையாழி பகுதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் தினேஷ் என்ற 44 வயதுநபரேஇவ்வாறுஉயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மூச்செடுக்க சிரமமென வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரை வேறொரு மருத்துவ விடுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டபோது நேற்று மாலை வைத்தியசாலையின் பின்பக்க நுழைவாயில்ஊடாகஉரியஅனுமதிகளின்றி வெளியேறியுள்ளார் என்று வைத்தியசாலைத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

அப்படி வெளியேறிய சிறிது நேரத்தில் கீழே விழுந்து அவர் உயிரிழந்துள்ளார். அவரது உடல் மருத்துவக் கூறாய்வுகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.



# ஈரளகுளம் வேலோடுமலை முருகன் ஆலயத்துக்கு இராமகிருஷ்ண மிசனால் அன்னதான மண்டபம்

## சுவாமி நீலமாதவானந்தா ஜீ திறந்து வைப்பு



( வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் வரலாற்று பிரசித்தி பெற்ற ஈரளகுளம் வேலோடும் மலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில் அன்னதான மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வேலோடுமலை முருகன் ஆலய தர்மகர்த்தா எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற அன்னதானமண்டபதிறப்புவிழாவில்,இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

லண்டனில்வாழும்திருமதிஜீவாதேவிவரதராஜன் , காலஞ்சென்ற மயில்வாகனன் வரதராஜன் ஞாபகார்த்தமாக இந்த அன்னதான மண்டபத்தை இராமகிருஷ்ண மிஷன் வேண்டுகோளின்படி நிறுவியுள்ளனர்.

இந்த பணியில் ராமகிருஷ்ண மிஷன் தொண்டர் கருணாநிதி பொறுப்பேற்று முருகன் ஆலயத்தின் தலைவர் தியாகராஜாவின் ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

அன்னதான மையத்தோடு இணைந்து சமய நூல்கள் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களையும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. (05)



# சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக ஏற்பாட்டில்

# வங்கிகளுக்கிடையிலான துடுப்பாட்டம்; கொமர்சல் வங்கி அணியினர் சம்பியன்




சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற்ற வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்ட சுற்றுத் தொடரில் கொமர்சல் வங்கி அணியினர் சாம்பியனை தம்வசப்படுத்தியிருந்தனர்.

அதேவேளையில் இரண்டாம் இடத்தை சம்பத் வங்கியினர் பெற்றுக் கொண்டனர்.

தொடரின்சிறந்ததுடுப்பாட்டவீரராக கொமர்சல் வங்கி அணியைச் சேர்ந்த மைடினும், சிறந்த பந்து வீச்சாளராக கொமர்சல் வங்கி அணியைச் சேர்ந்த சுஜியும், சிறந்த வீரராக சம்பத் வங்கி அணியின் சஜியும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உதவி மாவட்ட ஆளுநர் ரோட்டரியன் ஜோய் பிஜசீலன் கலந்து சிறப்பித்திருந்தார்.

கிருபா லேர்ணஸ், செலான் வங்கி, இலங்கை வங்கி, கொமர்சல் வங்கி மற்றும் கஜா விருந்தினர் விடுதி ஆகியோரின் விளம்பர அனுசரணையுடன்மேற்படிதுடுப்பாட்டசுற்றுத்தொடர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# நல்லிணக்க இப்தாரில் சாதனையாளர்களுக்கு பொன்னாடை போர்த்து மகத்தான கௌரவம்



சவூதி அரேபியாவுக்கான தூதுவராக நியமனம் பெற்றுள்ள சிரேஷ்ட இராஜதந்திரி ஓ. எல். அமீர் அஜ்வாத், வசந்தம் தொலைக்காட்சியின் பிரதான முகாமையாளராக நியமனம் பெற்றுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.இர்பான் ஆகியோருக்கு மட்டக்குளியில் கடந்த வியாழக்கிழமை நடத்திய இப்தார் நிகழ்வில் வைத்து ஐ டி எம் ன் சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் மகத்தான கௌரவிப்பு வழங்கினார்.

கலாநிதி ஜனகனின் எண்ணக் கருவில், இவருடைய ஜனனம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், ஐ டி எம். என் சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவோம் என்கிற மகுடத்திலான இப்தார் நிகழ்வு மட்டக்குளி ஹம்சா கல்லூரி மண்டபத்தில் பல நூற்று





கணக்கானவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

பொதுவாக இனங்களுக்கிடையிலான குறிப்பாக தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையிலான உறவு பாலமாக அமைந்த இந்நிகழ்வில் அஜ்வாத், இர்பான் ஆகியோர் கலாநிதி ஜனகனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது.

அத்துடன் அரசியல், சமூக, பொதுநல, கல்வி, ஊடக செயற்பாடுகளை மிக சிறப்பான முறையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமைக்காக அவருடைய அபிமானிகளால் கலாநிதி ஜனகன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (05)

# சிறு – நடுத்தர தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க திட்டம்

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை மேம்படுத்த அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டங்கள் மூலம் நாட்டில் பல புதிய தொழில்முனைவோரை உருவாக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அவர் வலியுறுத்தினார்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அதிகபட்ச பங்களிப்பையும் ஆதரவையும் வழங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கம்பஹா, நைவல ஜயசிங்க சிட்டி சென்டரில் புதிய உணவகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த உணவகத்தில் விருந்து அரங்குகள், கேட்போர் கூடம்; உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன. இந்த உணவகத்தின் மூலம் அனைத்து பண்டிகை நிகழ்வுகளுக்கும் சுவையான உணவு மற்றும் பானங்கள் வழங்கப்படுகின்றன.

அதன் அதிநவீன விருந்து மண்டபத்தில் ஒரே நேரத்தில் 1000 பேர் உட்கார முடியும்.

ஜயசிங்க சிட்டி சென்டரில் ஒரு வணிக வளாகமும் உள்ளது. இங்கு வரும் மக்கள் அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெற முடியும்.

கிட்டத்தட்ட 200 ஊழியர்கள் தற்போது ஜெயசிங்க குழுமத்தின் கீழ் பணிபுரிகின்றனர்.

ஜயசிங்க சிட்டி சென்டரின் தலைவர் அஜித் ஜயசிங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு நினைவு பரிசு ஒன்றை இங்கு வழங்கி வைத்தார். (05)

# வர்த்தக நிலையத்தில் ஆணின் சடலம் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் ஆலடி வீதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் இருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய ரங்கசாமி நேசரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனது குடும்பத்தைப் பிரிந்து தாயாருடன் வசித்து வந்ததுடன், இவ் வியாபார நிலையத்திலேயே தங்கி இருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

*தலைமன்னார் கடற்பரப்பினுல் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் புதன்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 07 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் வியாழக்கிழமை மாலை உத்தரவிட்டார்.*

*புதன்கிழமை இரவு இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து 2 படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைத்தனர்.*

*தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.*

*கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களை வியாழக்கிழமை மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.*

*இதன் போது விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் நீதிவான் குறித்த மீனவர்களை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# மதுவரி திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக தங்கராஜா கிழக்கில் முதல்முறையாக நியமனம்





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மது வரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக (மனித வளம்) கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர் ரோட்டரியன் சண்முகம் தங்கராஜா நியமிக்கப்பட்டார்.

சண்முகம் தங்கராஜா மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதி ஆணையாளர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

அவர் கொழும்பில் தனது உயர் பதவியை வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்படும் அதேவேளை, முழு இலங்கைக்கான பிரதி ஆணையாளராக பதில் கடமையையும் ஆற்றுவார்.

சண்முகம் தங்கராஜா பெரியகல்லாற்றை பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பகல்வியை பெரியகல்லாற்றிலும், பின்னர் வந்தாறுமூலை மற்றும் மட்டக்களப்பு இந்து கல்லூரி ஆகியவற்றில் இடைநிலை உயர்நிலைக் கல்வியையும் பெற்று மதுவரி திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக இணைந்து கொண்டார்.

32 வருட சேவை காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்து முதன் முதலில் மதுவரி பிரதி ஆணையாளராக நியமனம் பெற்ற ஒரே ஒருவர் தங்கராஜா ஆவார்.

சிறந்த விளையாட்டு வீரரான தங்கராஜா, கல்முனை ரோட்டரி கழகதலைவராக இருந்து, தற்போது மட்டக்களப்பு றோட்டரி கழகத்தின் நிருவாகசபை உறுப்பினராக சமூக பணியாற்றி வருகிறார்.

முன்னர், அம்பாறை மாவட்டத்தின் கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா, கிழக்கு மாகாணத்தின் புதிய உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று 01.01.2023 அன்று தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

சண்முகம் தங்கராஜா கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் உப தலைவராகவும், கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகவும் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# கிண்ணியா காதரியா ஜும்மா பள்ளி வாசல் இப்தார் நிகழ்வு





புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு கிண்ணியா காதரியா ஜும்மா பள்ளிவாசலில் நோன்புகளுக்கும் இசையருவிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முதல் நோன்பு தொடக்கம் 30 நோன்பு வரைக்கும் இந்த எஸ்கார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கதரியா ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகத்தின் ஏற்பாட்டின் செய்யப்பட்ட இந்த நிகழ்வு காதரியா ஜும்மா பள்ளிவாசலின் தலைவர் எம். எஸ்.எம். ஸாபி மதினி, உதவித்தலைவர் எம் எஸ் எம். பவுசி, செயலாளர் எஸ்.எச். எம். நளியும் ஆகியோரின் ஏற்பாட்டின் கீழ் ஒவ்வொரு நாளும் இடம் பெற்று வருகின்றன.

இதன் மூலம் இனங்களுக்கு இடையிலான நல்லுணர்வு, பரஸ்பர ஒற்றுமை, ஏழை எளிய மக்களின் நலன்களில் அக்கறை கொள்ளுதல் முதலிய நல்லிணக்க அடிப்படையில் இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு சுமார் 150 இற்கு மேற்பட்ட பயனாளிகள் இதன் மூலம் இப்தார் நிகழ்வுகளை செய்து வருகின்றனர்.(05)

# புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜிதின் வறுமை நிவாரணத் திட்டம்



(சியாஜ்)

புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜித் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நோன்பு காலத்தில் மாத்திரம் அல்லாமல் எல்லா காலங்களிலும் ஸாலிஹீன் பள்ளி பிரதேசவாசிகள் எவரும் வறுமையின் காரணமாக உணவு உட்கொள்ளாமல் இருக்க கூடாது என்ற மிகப் பெரிய நல்ல நோக்கத்துடன் அத்தியாவசியப் பொருள்களை எந்த நேரத்திலும் இலவசமாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய உதவிகளை புத்தளம் நகரின் ஏனைய பள்ளிவாசல் பிரதேச வாசிகளும் அந்தந்த பள்ளிவாசல் நிர்வாகத்தின் உறுதிப்படுத்தலுடன் பெற்றுக்கொள்ள முடியும்.


ஸாலிஹீன் பள்ளியில் அரிசி 01 கிலோ, மாவு 01கிலோ, சீனி 500 கிராம், பருப்பு 250 கிராம், சோயா பக்கட், தேயிலை 50 கிராம் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.

வறிய குடும்பத்தை சேர்ந்தவர்கள், அத்தியாவசிய பொருள்களை வாங்குவதற்கு கஷ்டமான குடும்பங்கள் ஸாலிஹீன் மஸ்ஜித் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான பொருள்களை பெற்றுக் கொள்ள முடியும்.(இரகசியம் பாதுகாக்கப்படும்)

ஓர் ஏழை குடும்பத்தின் கஷ்டத்தை நீக்க வேண்டும் அல்லது ஒரு வறிய குடும்பத்திற்கு உணவளிக்க வேண்டும் என்று யாராவது விரும்பினால் புத்தளம் ஸாலிஹீன் மஸ்ஜித் நிர்வாகத்தின் தலைவர் மௌலவி ஜிப்னாஸ் அவர்களை 0755051051 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வீடுகளுக்கு அத்தியாவசிய பொருள்கள் வாங்கும் போது விரும்பினால் 01 கிலோ அரிசி, 01 கிலோ மாவு, 500 கிராம் சீனி, 250 கிராம் பருப்பு, 01 பக்கட் சோயா அல்லது 50 கிராம் தேயிலை வாங்கி மஸ்ஜிதுக்கு வழங்குவதன் மூலமும் உதவி செய்ய முடியும். (05)

# கற்பிட்டி அல் அக்ஸாவின பழைய மாணவர் கூட்டம்




(கற்பிட்டி - சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 09 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் காலாவதியாகி ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் பழைய மாணவர் சங்கத்தின் பதவி நிலை தலைவரான அதிபர் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்காது காலாவதியான அதிகாரபூர்வமற்ற சங்கத்தின் இணைப்பு செயலாளரால் மேற்படி கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கையைப் பெற்றோருக்கான பொதுக் கூட்டத்தை கூட்டி சமர்ப்பிக்காமலும் அதற்கான அனுமதி பெறாமலும் நோன்பு விடுமுறைக்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பிருந்தே பாடசாலைக்கு சமுகமளிக்காமலும் பாடசாலை விடுமுறை வழங்கப்பட்ட பின் பாடசாலைக்கு வந்து செல்லும் செயற்பாட்டைத் தற்போதைய பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சார் செய்து வருகின்றார்.

அத்தோடு பாடசாலையில் இடம்பெற்ற தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைத்து கொள்ளும் நிகழ்வு தரம் ஆறிற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு மற்றும் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு போன்ற முக்கிய நிகழ்வுகள் எதிலும் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் அதிபர் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# வவுனியாவில் 14 வயதுச் சிறுமி பாலியல் துஸ்பிரயோகம்

## 36 வயதான தந்தை கைது

வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் குறித்த சிறுமியின் 36 வயதுடைய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 14 வயது சிறுமி வியாழக்கிழமை பாடசாலைக்கு சென்று தனது தனது சக மாணவி ஊடாகத் தான் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மேற்படி விடயம் தொடர்பில் பாடசாலையால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, துரிதமாக செயற்பட்ட பொலிஸார் சிறுமியை விசாரணை செய்ததில், குறித்த சிறுமியின் தாய் வீட்டில் இல்லாத போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரிய வந்ததுடன், சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தையான 36 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(05-100)

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டிலுள்ள பெண்களின் நிதியியல் அணுகல்மூலம் தேசிய பொருளாதார இயலுமையை வலுப்படுத்தல்

## பொருளாதாரத்துறை நிபுணர்கள் கருத்து




பொருளாதார நெருக்கடியாலும், மிகையான புலம்பெயர்வினாலும் நாடு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், பெண்களின்நிதியியல்அணுகலைவலுப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தில் பெண்களின் வகிபாகத்தை ஊக்குவிக்க முடியும் என அட்வகாட்டா அமைப்பின் கலந்துரையாடலில் பங்கேற்ற வணிக மற்றும் பொருளாதாரத்துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

அட்வகாட்டா அமைப்பால் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிவரும் பெண்களின் கொள்கைத்திட்ட வலையமைப்பு மகளிர் மாதத்தை முன்னிட்டு 'பெண்களின் நிதியியல் அணுகல் மூலம் பிரிவினையை சீரமைத்தல்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வொன்றை புதன்கிழமை மாலை கொழும்பிலுள்ள கோர்ட்யார்ட் பை மரியற் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் பெண்களின் வகிபாகம், பெண்களுக்கான நிதியியல் அணுகல் (பெண்கள் நிதியைக் கையாள்வதற்கான வாய்ப்பு) நிலை, அதில் நிலவும் தடைகள், அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகள், அதனூடாக தொழிற்படையிலும் தேசிய பொருளாதாரத்திலும் பெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதே இக்கலந்துரையாடலின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

அதன்படி, இந்நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய அட்வகாட்டா அமைப்பின் தலைவர் முர்தஸா ஜஃபர்ஜி, நாடு கடன்மறுசீரமைப்பை மேற்கொள்ளவேண்டியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இக்கலந்துரையாடல் ஏன் அவசியம் என்பது பற்றி விளக்கமளித்தார். தற்போதைய நெருக்கடியிலிருந்து நாடு மீட்சியடைய வேண்டுமெனில் மொத்தத் தேசிய உற்பத்தியின் அளவை அதிகரிக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய அவர், அதற்கு தொழிற்படையின் அளவை அதிகரித்தல் மற்றும் தொழிற்படையின் இயலுமையை அதிகரித்தல் ஆகிய இரு தெரிவுகளே உள்ளன எனக் குறிப்பிட்டார்.

அதன்படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெண்களை தேசிய தொழிற்படையில் உள்வாங்குவதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்தமுடியும் எனவும், அனைத்துப் பெண்களாலும் முறைசார் தொழில்களில் ஈடுபடமுடியாது என்பதால் அவர்களுக்கு முறைசாரா தொழில்வாய்ப்புக்களை வழங்கவேண்டியது அவசியம் எனவும் முர்தஸா ஜஃபர்ஜி வலியுறுத்தினார்.

அதேவேளை, பெண்களுக்கான நிதியியல் அணுகல் தொடர்பில் இங்கு விரிவாக விளக்கமளித்த அட்வகாட்டா அமைப்பின் சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி ரோஷன் பெரேரா, இலங்கையைப் பொறுத்தமட்டில் ஊதியம் அளிக்கப்படும் தொழிற்துறைகளில் பெண்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உள்வாங்கப்படுவதாகவும், இருப்பினும் மிகையான புலம்பெயர்வின் விளைவாக நாடு இன்னலுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் பெண்களின் வகிபாகத்தை அதிகரிப்பது பொருளாதார மீட்சிக்குப் பெரிதும் உதவும் என சுட்டிக்காட்டினார்.

'நிதியியல் அபிவிருத்தி என்பது ஒருபுறமிருந்த நிதியியல் அணுகலில் அனைவரும் உள்வாங்கப்படும் தன்மையும், சமத்துவமும் உறுதிசெய்யப்படவேண்டும். டிஜிற்றல் நிதியியல் சேவை வழங்கல் மூலம் இச்சவால்களை ஓரளவு குறைத்துக்கொள்ளவும், பெண்களின் நிதியியல் அணுகலை மேம்படுத்தவும் முடியும்.

இருப்பினும் டிஜிற்றல் நிதியியல் சேவைகள் தொடர்பில் பெண்களை அறிவூட்டல், அச்சேவையைப் பெறுவதற்கு அவசியமான சாதனங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் என்பன இன்றியமையாதவையாகும்.

தெற்காசிய பிராந்தியத்தில் உயர்வான அறிவுமட்டத்தைக் கொண்டிருக்கும் நாடாக இலங்கை இருந்தாலும், நிதியியல் அறிவில் எமது நாடு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

உலக வங்கியின் நிதியியல் தரவுகளின் பிரகாரம் இலங்கை மக்களின் நிதியியல் அறிவு 57 சதவீதமாகவும், வங்கிக்கணக்கை வைத்திருப்போர் எண்ணிக்கை 89 சதவீதமாகவும், இணையம் மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 17.8 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

டிஜிற்றல் நிதியியல் சேவை வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதுமான வருமானமின்மை, நாடளாவிய ரீதியில் விரைவான வலையமைப்பைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள், அநேகமானோர் டிஜிற்றல் நிதியியல் சேவையைப் பயன்படுத்துவதில் நாட்டம் காண்பிக்காமை போன்றன டிஜிற்றல் முறைமையின் ஊடாக பெண்களின் நிதியியல் அணுகலை மேம்படுத்துவதில் சவால்களைத் தோற்றுவித்துள்ளன. - என்று கலாநிதி ரோஷன் பெரேரா தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, பெண்கள் வர்த்தக மற்றும் கைத்தொழில் பேரவையின் இயக்குநர் சபை உறுப்பினர் துசிதா குமாரகுலசிங்கத்தால் தொகுத்தளிக்கப்பட்ட கலந்துரையாடலில் முதலில் கருத்து வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் சிறிகுமார குடகம, நாட்டில் நடைமுறையிலுள்ள நிதியியல்துறைசார் சட்டங்களில் பெண்கள் எவ்வகையிலும் புறந்தள்ளப்படவில்லை எனும் போதிலும், நடைமுறை யதார்த்தம் என்பது அதற்கு முற்றிலும் மாறுபட்டவகையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அதிலும் குறிப்பாக வங்கிக்கணக்கைப் பேணுவோர் எண்ணிக்கை, கடனட்டை உரிமையாளர்கள் எண்ணிக்கை போன்றன ஆண், பெண் இருபாலார் மத்தியில் சமமாகவே காணப்படுவதாகவும், இருப்பினும் டிஜிற்றல் நிதியியல் பயன்பாட்டிலேயே அசமத்துவம் நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு நிதியியல் நடவடிக்கைகளில் அனைவரினதும் பங்கேற்பை உறுதிப்படுத்தவேண்டிய நேரடிப்பொறுப்பு மத்திய வங்கிக்கு இல்லை எனினும், அதனை உறுதிப்படுத்தாமல் மத்திய வங்கியால் அதன் இலக்குகளை அடைந்துகொள்ளமுடியாது எனவும் சிறிகுமார குடகம அபிப்பிராயம் வெளியிட்டார்.

அவரைத் தொடர்ந்து கருத்துரைத்த 'சனச இன்டர்நெஷனல்' நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் சாமதானி கிரிவந்தெனிய, 'பொருளாதாரத்தில் பெண்களின் வகிபாகம் குறைவாக இருப்பதாகக் கூறுகின்றோம். அவ்வாறெனில் எங்கு அவர்களின் வகிபாகம் உயர்வாக இருக்கின்றது என நோக்க வேண்டும். பெண்களை வணிக மற்றும் சந்தை நடவடிக்கைகளில் உள்வாங்கும் அதேவேளை, அவர்கள் ஏற்கனவே பங்களிப்புச்செய்யும் விடயங்களுக்குரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்காவிடின், பிறிதொரு வகையில் நாட்டின் பொருளாதாரமே பாதிப்படையும்' என்ற முக்கிய விடயத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும் பெண்களிடத்தில் நிதியியல் நிர்வாகத்தைக் கையளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து 'செலின்' நிறுவனத்தின் வணிக அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் செலினா பீரிஸும், பெண்களிடம் நிதிநிர்வாகத்தை வழங்கும்போது அதற்குரிய தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்புசார் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியதன் அவசியம் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியியல் துறை நிபுணர் உரேஷா வல்பிட்டிகமவும் எடுத்துரைத்தனர்.

(05)

# மிருசுவில் வீதியின் குறுக்கே சரிந்து வீழ்ந்தது பவுஸர்

## வீதியெங்கும் எரிபொருள்





யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் ஏ-9 வீதியில் டிப்பரும் எரிபொருள் பவுஸரொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவம் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ள நிலையில் வீதிப் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோதுண்ட இரு வாகனங்களும் தடம்புரண்டு சரிந்து விழுந்துள்ளன.

விபத்து காரணமாக எரிபொருள் பவுஜரில் இருந்த எரிபொருள் வீதி முழுவதும் சிந்திக் காணப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கல்முனையில் சிறப்பாக நடைபெற்ற உலக வாய்வழி சுகாதாரதின நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)

உலக வாய்வழி சுகாதார தினம் கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

உலக வாய்வழி சுகாதார தினத்தையொட்டிய இந்நிகழ்வு கடந்த புதன்கிழமை வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவினரின் ஏற்பாட்டிலும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வைத்தியர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை பல் வைத்தியநிபுணர் டாக்டர் எஸ்எஸ்யூ.. ஷி(க)பா வழங்கினார்.

வைத்தியசாலையின் பல்வைத்திய நிபுணர் டாக்டர் ஐஎம்ஐ.முன்ஷிப்பால் பற்சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில் -

பற்களின் முக்கியத்துவம், பற்களில் ஏற்படும் நோய்களின் அறிகுறிகள், வாய் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள், பல் துலக்கும் சரியான முறைகள், பற்சிகிச்சை முறைகள், மருந்துகள் பற்றி விளக்கமாக விவரித்தார்.

பற்சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி. வி.சுதானந்தி நன்றியுரையாற்றினார்.

மேலும் நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜே. மதன், வைத்திய நிபுணர்கள், பல் வைத்திய நிபுணர்கள், தாதிய பரிபாலகர்கள், வைத்திய அதிகாரிகள், நிர்வாக உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும்



உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், ஓட்டோ சாரதிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்ச்சியை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி என்.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார்.(05)

# சங்கானையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 14 நிலையங்கள் சிக்கின

## ஒரு லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிப்பு

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாள்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த சில நாள்களாக சங்கானை பிரிவு பொது சுகாதார பரிசோதகர், வட்டுக்கோட்டை பிரிவு பொது சுகாதார பரிசோதகர், அராலி பிரிவு பொது சுகாதார பரிசோதகர், சுழிபுரம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது திகதி காலாவதியான உணவு பொருள்கள், பழுதடைந்த உணவு பொருள்கள், உரிய சுகாதார நடை முறைகளை பின்பற்றாத உணவகங்கள் என 14 உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக்கொண்டன.

மேற்படி 14 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. வியாழக்கிழமை வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், உணவக உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து 74 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2024இல் வெளியிடப்பெற்றது